ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத₂ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேதா₃ந்தாசார்யவர்யோ மே ஸந்நித₄த்தாம் ஸதா₃ா ஹ்ருதி₃ ॥

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

# ॥ சொல்லுவன் ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க₃ராமாநுஜ மஹாதே₃ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ சொல்லுவன் ॥

## பரமேச்சுர விண்ணகரம்

‡சொல்லு வன்சொல் பொருள் தான் அவையாய்ச்⋆
சுவை ஊறொலி நாற்றமும் தோற்றமுமாய்⋆
நல் அரன் நான்முகன் நாரணனுக்-
கிடந் தான்⋆ தடம் சூழ்ந்தழகாய கச்சி⋆
பல்லவன் வில்லவன் என்றுலகில்⋆
பலராய்ப் பல வேந்தர் வணங்கு கழல்
பல்லவன்⋆ மல்லையர் கோன் பணிந்த⋆
பரமேச்சுர விண்ணகரம் அதுவே (1)

கார்மன்னு நீள் விசும்பும்⋆ கடலும்
சுடரும் நிலனும் மலையும்⋆ தன் உந்தித்
தார்மன்னு தாமரைக் கண்ணன் இடம்⋆
தட மா மதிள் சூழ்ந்தழகாய கச்சி⋆
தேர் மன்னு தென்னவனை முனையில்⋆
செருவில் திறல் வாட்டிய திண் சிலையோன்⋆
பார்மன்னு பல்லவர் கோன்பணிந்த⋆
பரமேச்சுர விண்ணகரம் அதுவே (2)

உரம் தரு மெல் அணைப் பள்ளி கொண்டான்⋆
ஒருகால் முன்னம் மா உருவாய்க் கடலுள்⋆
வரம் தரு மா மணிவண்ணன் இடம்⋆
மணி மாடங்கள் சூழ்ந்தழகாய கச்சி⋆
நிரந்தவர் மண்ணையில் புண் நுகர்வேல்⋆
நெடு வாயில் உகச் செருவில் முன நாள்⋆
பரந்தவன் பல்லவர் கோன் பணிந்த⋆
பரமேச்சுர விண்ணகரம் அதுவே (3)

அண்டமும் எண் திசையும் நிலனும்⋆
    அலை நீரொடு வான் எரி கால் முதலா
உண்டவன்⋆ எந்தை பிரானதிடம்⋆
    ஒளி மாடங்கள் சூழ்ந்தழகாய கச்சி⋆
விண்டவர் இண்டைக் குழாமுடனே⋆
    விரைந்தார் இரியச் செருவில் முனைந்து⋆
பண்டொருகால் வளைத்தான் பணிந்த⋆
    பரமேச்சுர விண்ணகரம் அதுவே (4)

தூம்புடைத் திண் கை வன் தாள் களிற்றின்⋆
    துயர் தீர்த்தரவம் வெருவ⋆ முன நாள்
பூம் புனல் பொய்கை புக்கான் அவனுக்-
    கிடந் தான்⋆ தடம் சூழ்ந்தழகாய கச்சி⋆
தேம் பொழில் குன்றெயில் தென்னவனைத்⋆
    திசைப்பச் செருமேல் வியந்தன்று சென்ற⋆
பாம்புடைப் பல்லவர் கோன் பணிந்த⋆
    பரமேச்சுர விண்ணகரம் அதுவே (5)

திண் படைக் கோளரியின் உருவாய்⋆
    திறலோன் அகலம் செருவில் முன நாள்⋆
புண் படப் போழ்ந்த பிரானதிடம்⋆
    பொரு மாடங்கள் சூழ்ந்த அழகாய கச்சி⋆
வெண் குடை நீழல் செங்கோல் நடப்ப⋆
    விடை வெல் கொடி வேல் படை முன் உயர்த்த⋆
பண்புடைப் பல்லவர் கோன் பணிந்த⋆
    பரமேச்சுர விண்ணகரம் அதுவே (6)

இலகிய நீள் முடி மாவலி தன்
    பெரு வேள்வியில்⋆ மாண் உருவாய் முன நாள்⋆
சலமொடு மா நிலம் கொண்டவனுக்-
    கிடந் தான்⋆ தடம் சூழ்ந்தழகாய கச்சி⋆
உலகுடை மன்னவன் தென்னவனை⋆
    கன்னி மா மதிள் சூழ் கருவூர் வெருவ

பல படை சாய வென்றான் பணிந்த⋆
    பரமேச்சுர விண்ணகரம் அதுவே (7)

குடைத் திறல் மன்னவனாய்⋆ ஒருகால்
    குரங்கைப் படையா⋆ மலையால் கடலை
அடைத்தவன் எந்தை பிரானதிடம்⋆
    மணி மாடங்கள் சூழ்ந்தழகாய கச்சி⋆
விடைத் திறல் வில்லவன் நென்மெலியில்⋆
    வெருவச் செரு வேல் வலங்கைப் பிடித்த
படைத் திறல் பல்லவர் கோன் பணிந்த⋆
    பரமேச்சுர விண்ணகரம் அதுவே (8)

பிறையுடை வாணுதல் பின்னை திறத்து⋆
    முன்னே ஒருகால் செருவில் உருமின்⋆
மறை உடை மால் விடை ஏழ் அடர்த்தாற்-
    கிடந் தான்⋆ தடம் சூழ்ந்த அழகாய கச்சி⋆
கறை உடை வாள் மற மன்னர் கெட⋆
    கடல்போல் முழங்கும் குரல் கடுவாய்⋆
பறை உடைப் பல்லவர் கோன் பணிந்த⋆
    பரமேச்சுர விண்ணகரம் அதுவே (9)

‡பார் மன்னு தொல் புகழ்ப் பல்லவர் கோன்
    பணிந்த⋆ பரமேச்சுர விண்ணகர் மேல்⋆
கார் மன்னு நீள் வயல் மங்கையர் தம்
    தலைவன்⋆ கலிகன்றி குன்றாதுரைத்த⋆
சீர் மன்னு செந்தமிழ் மாலை வல்லார்⋆
    திருமாமகள் தன் அருளால்⋆ உலகில்
தேர் மன்னராய் ஒலி மா கடல் சூழ்⋆
    செழு நீர் உலகாண்டு திகழ்வர்களே (10)

॥ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம் ॥